இன்றைய செய்தி நாளைய வரலாறு




# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 101 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – கார்த்திகை 05 – வெள்ளிக்கிழமை 21 நவம்பர் 2025 – கோவை ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 101: Thiruvalluvar Year - 2056 - Karthigai 05 - Friday 21 November 2025 - Kovai ★★ 8 Pages ₹ 5.00

## மதுரைக்கும் – கோவைக்கும் “NO METRO”!

# தமிழ்நாட்டை பழி வாங்கும் பா.ஜ.க.!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

**சென்னை, நவ. 21-**

**தமிழ்நாட்டில் மதுரை மற்றும் கோவை மாநகரங்களுக்கு 20 லட்சத்திற்கும் குறைவாகவே மக்கள் தொகை உள்ளதாகக் குறிப்பிட்டு மெட்ரோ ரயில் திட்டம் இல்லை என்று கூறி அத்திட்டத்தை ஒன்றிய அரசு நிராகரித்துள்ளது.**

**அதற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கண்டனம் தெரிவிக்கும் வகையில் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பக்கத்தில், “தமிழ்நாட்டை பழி வாங்குகிறது ஒன்றிய பா.ஜ.க. கூட்டாட்சி கருத்தியலை இப்படி ஒன்றிய அரசு சிதைப்பதைச் சுயமரியாதை மிக்க மண்ணான தமிழ்நாடு ஒருபோதும் ஏற்காது” என்று பதிவிட்டுள்ளார்.**

கோவை மாவட்டத்திற்கு ரூ.10,740 கோடியில் 34.8 கிமீ தொலைவுக்கும், மதுரையில் ரூ.11,368 கோடியில் 32 கிமீ தொலைவுக்கும் மெட்ரோ ரயில் திட்டம் கொண்டு வருவதற்கான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு தமிழக அரசு ஒன்றிய அரசிடம் ஒப்புதலுக்கு அனுப்பி இருக்கிறது. இந்த திட்ட அறிக்கை நீண்ட காலமாக நிலுவையில் இருக்கும் நிலையில், தற்போது இரு மாவட்டங்களுக்கான மெட்ரோ திட்டம் நிராகரிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.



மெட்ரோ திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்க மக்கள் தொகை 20 லட்சம் வரை தேவை என்றும், கோவை மற்றும் மதுரையில் 15 லட்சம் மக்கள் தொகை மட்டுமே இருப்பதால் அனுமதி கொடுக்க முடியாது என்றும் ஒன்றிய அரசு திட்ட அறிக்கையை திருப்பி அனுப்பி இருப்பதாக கூறப்படுகிறது.

இதனிடையே 20 லட்சம் மக்கள் தொகைக்கும் குறைவாக இருக்கும் இடங்களில் மெட்ரோ ரயில் திட்டங்களை செயல்படுத்த பல்வேறு நேரங்களில் ஒன்றிய அரசு அனுமதி அளித்துள்ளது.

ஏற்கனவே உத்தரப் பிரதேச மாநிலம் ஆக்ராவில் 16 லட்சம் மக்கள் தொகை இருந்த போதும், அங்கு மெட்ரோ ரயில் திட்டத்திற்கு அனுமதி அளித்து, திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.


அதேபோல் மத்தியப்பிரதேச மாநில போபால் நகரில் 18 லட்சம் மக்கள் தொகையே இருந்த போதும், அங்கும் மெட்ரோ ரயில் திட்டத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது.

பீகார் தலைநகர் பாட்னாவில் 17 லட்சம் மக்கள் தொகை இருந்த போதும், மெட்ரோ ரயிலுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

உத்தரப்பிரதேச மாநிலம் கான்பூர் மற்றும் மீரட், ஒடிசா மாநில புவனேஷ்வர், ஹரியானா மாநிலம் குருகிராம், மகாராஷ்டிரா மாநிலம் நாக்பூர் மற்றும் புனே, மத்தியப்பிரதேச மாநிலம் இந்தூர், குஜராத் மாநிலம் சூரத் மற்றும் கேரளா மாநிலம் கொச்சி நகரங்களில் குறைவான மக்கள் தொகை இருந்த போதும், மெட்ரோ திட்டத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டு, அடுத்தக்கட்ட பணிகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் கோவை, மதுரை மாநகரங்களில் மெட்ரோ ரயில் திட்டம் தற்போது இல்லை என்பதைத் தொடர்ந்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கீழ்க் கண்டவாறு பதிவிட்டுள்ளார்.

**‘கோயில் நகர்’ மதுரைக்கும், ‘தென்னிந்திய மான்செஸ்டர்’ கோவைக்கும் “NO METRO” என நிராகரித்துள்ளது ஒன்றிய பா.ஜ.க. அரசு!**




**அனைவருக்கும் பொதுவானதாகச் செயல்படுவதுதான் அரசுக்கான இலக்கணம். அதற்கு மாறாக, பா.ஜ.க.வைத் தமிழ்நாட்டு மக்கள் நிராகரிப்பதற்காக இப்படி பழிவாங்குவது கீழ்மையான போக்கு. பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் உள்ள சிறிய இரண்டாம் நிலை மாநகரங்களுக்குக் கூட மெட்ரோ ரயிலுக்கான ஒப்புதல் வழங்கிவிட்டு, எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களைப் புறக்கணிப்பது அழகல்ல. கூட்டாட்சிக் கருத்தியலை இப்படி சிதைப்பதைச் சுயமரியாதை மிக்க மண்ணான தமிழ்நாடு ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது.**

**சென்னை மெட்ரோ பணிகளைத் தாமதப்படுத்தி முடக்க நடந்த முயற்சிகளை முறியடித்து முன்னேறினோம்! அதேபோல மதுரை & கோவையிலும் வருங்கால வளர்ச்சிக்கு இன்றியமையாத தேவையான மெட்ரோ இரயிலைக் கொண்டு வருவோம்!**

**தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

### வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்தம்:

# காங்கிரஸ் சட்டரீதியாகப் போராடும்!

## மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி அறிவிப்பு!

*புதுடெல்லி, நவ. 21-*

வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்த விவகாரத்தில், காங்கிரஸ் அரசியல் ரீதியாக, சட்டரீதியாக போராடும் என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி கூறினார்.

**டெல்லியில் ஆலோசனை!**

தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா உள்பட 12 மாநிலங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்தப்பணி நடந்து வருகிறது. ஏற்கனவே, தேர்தல் கமிஷன் மீது வாக்குத் திருட்டு குற்றச்சாட்டை காங்கிரஸ் கட்சி சுமத்தி வருகிறது.

இதையடுத்து, வாக்காளர் பட்டியல் திருத்தம் நடக்கும். 12 மாநிலங்களில் பின்பற்ற வேண்டிய அணுகுமுறை குறித்து அந்தந்த மாநிலங்களின் காங்கிரஸ் நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்த காங்கிரஸ் மேலிடம் முடிவு செய்தது.



அந்த ஆலோசனை கூட்டம், டெல்லியில் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தலைமையில் நடந்தது.

முன்னாள் தலைவர் ராகுல் காந்தி, காங்கிரஸ் பொதுச் செயலாளர் கே.சி.வேணுகோபால் ஆகியோரும் பங்கேற்றனர்.

மாநில காங்கிரஸ் தலைவர்கள், சட்டசபை காங்கிரஸ் தலைவர்கள், காங்கிரஸ் செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வாக்காளர் பட்டியல் திருத்தத்தின்போது எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

கூட்டத்தில் ராகுல்காந்தி பேசியதாவது:-

தூய்மையான வாக்காளர் பட்டியலை வழங்க வேண்டியது தேர்தல் கமிஷன் பொறுப்பு. ஆனால் அந்த பொறுப்பை அரசியல் கட்சிகள் மீது திணிக்க முயற்சிக்கிறது.

வாக்காளர் பட்டியல் திருத்த விவகாரத்தில் அரசியல்ரீதியாக, சட்டரீதியாக, அமைப்புரீதியாக காங்கிரஸ் போராடும். இப்பணி அவசர கதியில் நடத்தப்படுகிறது. உண்மையான வாக்காளர்களை நீக்குவதை நோக்கமாக கொண்டுள்ளது.

இவ்வாறு மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி பேசினார்.

---

### மதுரை மெட்ரோ ரயில் திட்டங்களை முடக்கியுள்ள

## ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து ‘மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி’களின் சார்பில்

## இன்று மதுரையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

தமிழ்நாட்டிற்கான ஜி.எஸ்.டி. நிதி பகிர்வில் பாரபட்சம், மாணவர்களின் கல்வி நிதியைக் கூட ஒதுக்க மறுப்பது என தமிழ்நாட்டையும், தமிழ் மக்களையும் தொடர்ந்து புறக்கணித்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசு தற்போது கோவை, மதுரை மெட்ரோ ரயில் திட்டங்களையும் முடக்கி வஞ்சித்துள்ளது.

தமிழ்நாட்டின் வளர்ச்சியைத் தடுக்கும் நோக்கோடு செயலாற்றி வரும் ஒன்றிய பா.ஜ.க அரசைக் கண்டித்து ‘மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி’களின் சார்பில் நேற்று (20.11.2025 - வியாழக்கிழமை) கோவையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றதை தொடர்ந்து இன்று (21.11.2025 - வெள்ளிக்கிழமை) மதுரையிலும் காலை 10.00 மணிக்கு “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்” நடைபெறும்.

**- மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகள்**